DEPOSITION OF WITNESS
*(Chapter XXIII Code of Criminal Procedure)*

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

## SC.No.468/2024

| | | | |
|---|---|---|---|
| அ.சா . | : 1 | நாள் | : 11.07.2025 |
| பெயர் | : மாதவன் | தொழில் | : |
| தந்தை பெயர்/ | : | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலூகா | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 11th day of July 2025.

எதிரிகள் ஆஜர்

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூர் மாவட்டம் சுல்தான்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு தென்காசி காவல் நிலையத்தில் பணிபுரிந்தபோது கடந்த 13.01.2020 ம் தேதி நானும், காவலர் சிறப்பு உதவி ஆய்வாளர் சம்சுதீன், தலைமைக்காவலர் மாரியப்பன், ஜசக்ராஜா, முதல் நிலை காவலர் ரமேஷ், மற்றும் காவலர் கார்த்திக் ஆகியோர்கள் ரோந்து அலுவலில் இருந்தபோது எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வாகினி தியேட்டர் வடக்கே தென்காசி - ஆய்க்குடி ரோட்டில் இரயில்வே கேட்டிற்கு வடபுறம் உள்ள தென்காசியைச் சேர்ந்த ஆறுமுகம்

முதலியார் மகன் சண்முகசுந்தரம் என்பவரது பாலடைந்த வீட்டில் சென்று பார்த்தபோது அங்கே எனக்கு ஏற்கனவே நன்கு தெரிந்த தென்காசி கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட முகமது இஸ்மாயில் என்ற மேசாக் நின்று கொண்டிருந்தார் அவருக்கு அருகே நான்கு நபர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். நான் அவர்களை மறைந்திருந்து கண்காணித்தபோது முகமது மேசாக் என்பவர் நமது அமீர், காஜா மைதீன் என்பவர் சொல்லிக் கொடுத்ததுபோல் இந்தியா இறையாண்மைக்கும், தேசிய ஒற்றுமைக்கும், பங்கம் விளைவித்து அவர் சொன்ன திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்றும், இந்த நாடே அதிரும்படி ஏதாவது ஒரு தீவிரவாத செயலை செய்ய வேண்டுமென்றும் அதற்கு நமது உயிரைக் கூட தியாகம் செய்ய வேண்டுமென்றும், அதற்கு எதிராக யார் வந்தாலும் அவர்களையும் கொல்ல வேண்டுமென்றும், நமது நண்பர்கள் கன்னியாகுமரி செய்த செயலால் இந்த நாடே பதறிப்போய் உள்ளதாகவும் அதே போல் நாமும் திருநெல்வேலி அல்லது தென்காசி மாவட்டத்தில் ஏதாவது ஒரு தீவிரவாத செயலை செய்து பொது சொத்துக்கு சேதம் ஏற்படுத்த வேண்டுமென்றும், நமது அமீர், காஜா மைதீன் சொல்லிக் கொடுத்த திட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்றும் தற்போது நமது அமீர், காஜா மைதீன் மற்றும் அவரது நண்பர்களை காவல் துறையினர் கைது செய்துவிட்டதாகவும், அதை கேட்டு நாம் வருத்தப்பட்டு கொதித்து போய் உள்ளதாகவும், நமது அமீர், காஜா மைதீன் திட்டங்களை உடனே நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னார் அதை கேட்டு கரீம் நவாஸ், நமது

திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று கைகளை தூக்கிக் கொண்டு கோசமிட்டார் அவருடன் மற்றவர்களும் சேர்ந்து கோசமிட்டார்கள். அப்போது 16.30 மணி இருக்கும். அவர்களை அப்படியே அந்த இடத்தில் விட்டுச் சென்றால் கன்னியாகுமரி மாவட்டம் களியாக்காவிளை சோதனை சாவடியில் சிறப்பு உதவி ஆய்வாளர் வில்சன் என்பவரை சுட்டுக் கொன்றதுபோன்றும் மேலும் இந்திய இறையாண்மைக்கும், தேசிய ஒற்றுமைக்கும், பங்கம் விளைவிக்க கூடும் என்பதாலும் இவர்கள் திட்டத்தின்படி திருநெல்வேலி அல்லது தென்காசி மாவட்டத்தில் ISIS பயங்கரவாதிகள் போல் ஏதாவது ஒரு சதிச் செயலை செய்து பொதுமக்களின் உயிருக்கும், பொது சொத்திற்கும் சேதம் விளைவிக்கக் கூடும் என்பதாலும் உடனே நாங்கள் அவர்களை சுற்றி வளைத்து பிடிக்க முயற்சித்தோம் அப்போது தப்பியோடிவர்களை பொது மக்கள் கண்ணன் மற்றும் மணிகண்டன் உதவியுடன் பிடித்தோம். பின்னர் அவர்களை விசாரித்தபோது பெயர் விலாசம் கூறினார்கள். அவர்கள் இஸ்மாயில் என்ற மேசாக், கரீம் நவாஸ், அல்ஹபீப், ஜக்காரியா மற்றும் அப்துல் மீரான் மைதீன் என்று கூறினார்கள். நாங்கள் அவர்களை பிடிக்கும்போது கரீம் நவாஸ் என்பவருக்கு இடது முட்டியில் மற்றும் தொடையில் சீராய்ப்பு காயம் ஏற்பட்டது. அல்ஹபீப் என்பவருக்கு முட்கள் கிழித்ததில் நெற்றியில் காயங்கள் ஏற்பட்டது. மேலும், அவர்களை விசாரித்தபோது கடந்த 4 வருடங்களாக மேலப்பாளையம், காயல்பட்டினம், பெங்களூரு போன்ற இடங்களுக்கு சென்று இறையாண்மைக்கும், தேசிய ஒற்றுமைக்கும் பங்கம்

விளைவிக்க வேண்டுமென்று தொடர்ந்து செயல் திட்டங்களை தீட்டியுள்ளனர் என்று தெரிய வந்தது. பின்னர் அவர்களை பொதுமக்கள் கண்ணன் மற்றும் மணிகண்டன் உதவியுடன் கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து 13.01.2020 தேதியன்று 17.30 மணிக்கு குற்ற எண்.19/2020 வழக்கின் 7(1) (a) CLA Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவலறிக்கை அ.சா.ஆ.1 ஆகும். முதல் தகவலறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு விசாரணை நகலை ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் விசாரித்தார். அதன்பின்னர் காவல் துணை கண்காணிப்பாளரும் என்னை விசாரித்தார்.

<u>1, 5 எதிரிகள் தரப்பில் கு.வி.</u>

நான் மாலை 5.30 மணிக்கு முதல் தகவலறிக்கையை பதிவேற்றம் செய்ததாக குறிப்பிட்டுள்ளேன். நான் ஆய்க்குடி ரோட்டில் ரோந்து சென்று கொண்டிருந்தபோது இரகசிய தகவல் கிடைத்தது. நான் கண்காணித்த இடத்தையும், அந்த இடத்தின் 5 நபர்கள் கூடி இந்திய இறையாண்மைக்கு எதிராக சதித்திட்டம் தீட்டிக் கொண்டிருப்பதாக எனக்கு தகவல் கிடைத்தது. நாங்கள் ரோந்து செல்லும்போது வாக்கி டாக்கி எடுத்துச் செல்வோம் எங்களுக்கு அலைபேசியும் உள்ளது. ஒரு குற்றச் செயல் சம்பந்தமாக நபர்களை கைது செய்து நிலையம் கொண்டு சென்றால் நிலைய பொறுப்பு அலுவலரிடம் தனியறிக்கை கொடுக்க வேண்டுமென்றால் சரிதான். இவ்வழக்கில் நான் தனியறிக்கை ஏதும்

தயாரிக்கவில்லை என்றால் சரிதான். எனக்குதான் தகவல் கிடைத்தது நான்தான் வழக்கை பதிவு செய்தேன். என்னுடைய முதல் தகவலறிக்கையில் எதிரிகளை சம்பவ இடத்தில் கைது செய்த விவரத்தை உடனடியாக மேல் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்ததாக கூறவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர் விசாரித்தபோது கூறவில்லை. எனக்கு இரகசிய தகவல் கிடைத்த நேரத்திலிருந்து நான் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்யும் வரை எங்கள் மேல் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்ததாக கூறியிருக்கிறேனா என்றால் கூறவில்லை. ஒரு வழக்கை பதிவு செய்ய வேண்டுமானால் நான் மேல் அதிகாரிகளின் அனுமதி பெற வேண்டுமென்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்திலிருந்து 16.00 மணிக்கு புறப்பட்டேன். நான் என் இருசக்கர வாகனத்தில் புறப்பட்டுச் சென்றேன் அது எனக்கு சொந்தமானதாகும். நாங்கள் மூன்று இருசக்கர வாகனங்களில் சென்றோம். நாங்கள் எதிரிகளை ஆட்டோவில் நிலையம் கொண்டு வந்தோம். புகாரிலும், ஆய்வாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணையிலும் இந்த விவரங்களை கூறவில்லை. ஆட்டோ ஓட்டுநர் பெயர் , வாகன பதிவெண் போன்ற விவரங்களை எனது முதல் தகவலறிக்கையிலும், ஆய்வாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணையிலும் இந்த விவரங்களை கூறவில்லை. நான் கூறுவதுபோல் ஒரு ஆட்டோவில் 5 நபர்களை அழைத்து வர இயலாது என்று சொன்னால் சரியல்ல. நாங்களும் அதே ஆட்டோவில் நிலையத்திற்கு வந்தோம். நாங்கள் மூன்று நபர்கள்

எதிரிகளுடன் ஆட்டோவில் வந்தோம். ஆட்டோவில் நாங்கள் உட்பட 9 நபர்கள் ஒரே நேரத்தில் பயணிக்க முடியாது என்று சொன்னால் சரியல்ல. ஆய்குடி சாலை வாகனப் போக்குவரத்து மற்றும் மக்கள் நடமாட்டம் உள்ள சாலை என்றால் சரிதான். நாங்கள் கைது செய்தபோது அங்கு மக்கள் கூடவில்லை. சம்பவ இடம் அமைந்த வீடு உள்ள பகுதி சுமார் 1 1/2 ஏக்கர் அமைந்த பகுதி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வீட்டைச் சுற்றி முட்புதர்கள் மிகுதியாக இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டில் எத்தனை அறைகள் இருந்தது என்று எனக்கு ஞாபகமில்லை. நான் அந்த வீட்டிற்குள் சென்றேன். அந்த வீட்டிற்கு கதவுகள் இல்லை. எத்தனை அறைகள் என்று ஞாபகமில்லை. அந்த வீட்டிற்கு எத்தனை வாசல் உள்ளது என்றும் ஞாபகமில்லை. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் எதிரிகளை சொன்ன இடத்தில் பார்த்ததாக கூறுவது தவறு என்றும் உண்மையில் நாங்கள் அந்த இடத்தில் எதிரிகளை பார்த்திருந்தால் அந்த வீட்டிற்கான வாசல் எத்தனை உள்ளது என்பதையும் பாதுகாப்பு கருதி கவனித்திருப்போம் என்றும் நான் கூறுவதுபோல் அதுபோன்ற நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளாததால்தான் அந்த வீட்டில் எத்தனை வாசல் இருந்தது என்று எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த வீட்டிற்கு வெளியே நான் மறைந்திருந்தேன் நான் எந்த இடத்தில் மறைந்திருந்தேன் என்று ஞாபகமில்லை மற்ற காவலர்கள் வேறு வேறு இடத்தில் சுற்றி இருந்தார்கள். அந்த வீட்டிற்கு சுற்றுச் சுவர் இல்லை. நான் கூறும் சம்பவ இடம் அமைந்த வீடு

சுற்றுச்சுவருடன் கூடியது என்றும் அதை தற்போதும் ஆணையர் மூலம் பார்வையிட்டால் நான் கூறும் சங்கதிகள் பொய் என்று துலங்கும் என்றால் சரியல்ல. சுமார் 10 முதல் 15 நிமிடம் வரை ஒழிந்திருந்து உரையாடலை கேட்டேன். இரகசிய தகவல் எனக்குதான் வந்தது. நான் முதலில் வீட்டிற்குள் நுழைந்தேன் மற்ற போலீசாரும் என் பின்னால் வந்தார்கள். நானும், கார்த்திக், ரமேஷ் ஆகியோர்களும் துரத்தினோம். சுமார் 100 முதல் 50 மீட்டர் தூரத்திற்குள்ளாக பிடித்தேன். நான் கூறுவது தவறு என்றும் நான் சொன்ன நேரத்தில் அங்கு எதிரிகளே இல்லை என்று சொன்னால் சரியல்ல. அடர்ந்த முள்வேலிக்குள் தப்பியோடும் நபரை துரத்திச் செல்லும்போது துரத்திச் செல்லும் நபர்களுக்கும் காயம் ஏற்படும் என்று சொன்னால் சரியல்ல. முதல் தகவலறிக்கையில் மேற்படி கண்ணன் மற்றும் மணிகண்டன் பெயரை குறிப்பிட்டுள்ளேன். முதல் தகவலறிக்கையில் அவ்வாறு கூறப்படவில்லை என்று அ.சா.1 யை பார்வையிட்ட பின்னர் சாட்சி கூறுகிறார். நான் நீதிமன்றத்தில் தவறான தகவல்களை கூறுகிறேன் என்றால் சரியல்ல அது தண்டனைக்குரிய குற்றம் என்றால் சரியல்ல. சம்பவ வீட்டிலேயே வைத்து எதிரிகளை விசாரித்து அவர்கள் பெயர், முழு முகவரியுடன் விவரம் எழுதினேன். ஒவ்வொருவருக்கும் சுமார் 2 நிமிடங்கள் ஆனாது. ஆட்டோவை நாங்கள் அழைக்கவில்லை அது போக்கு ஆட்டோவாகும். சம்பவம் நடந்ததாக கூறப்படும் தென்காசி காவல்நிலைய எல்லைகுட்பட்ட பீட்-1 என்ற பகுதியில் அமைந்துள்ளதா என்றால் அதுபற்றி

எனக்கு ஞாபகமில்லை. முதல் தகவலறிக்கையில் அவ்வாறுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பீட் காவலர்கள் தங்களது வருகையை உறுதி செய்யும் பீட் புத்தகம் எங்கு இருக்கும் என்றால் அந்த இடம் தற்போது ஞாபகமில்லை. ஒரு இடத்தில் நபரை கைது செய்யும்போது அந்த பகுதி கிராம நிர்வாக அலுவலரை அழைத்து அவர்கள் முன்னிலையில் கைது செய்ய வேண்டுமென்றால் அதற்கு அவசியமில்லை. நிலையம் வந்து முதல் தகவலறிக்கை பதிவு செய்ய 30 நிமிடங்கள் முதல் 40 நிமிடங்கள் ஆனாது. நான் சொல்ல சொல்ல தட்டச்சு செய்தார். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் எனக்கு தகவல் கிடைத்ததாகவும் நான் சம்பவ இடம் சென்றதாகவும் அங்கு வைத்து எதிரிகளை கண்காணித்ததாகவும் அதன் பின்னர் அவர்களை கைது செய்ததாகவும் ஆட்டோவில் ஏற்றி நிலையம் கொண்டு வந்ததாகவும் நான் சொல்ல சொல்ல முதல் தகவலறிக்கை பதிவு செய்தததாகவும் கூறுவது பொய் என்றும் மேற்படி ஆவணங்கள் அனைத்தும் எங்களால் பின்னிட்டு முன் நேரம் தேதியிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளை கைது செய்யும்போது அவர்களது உறவினர்களுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். முதல் தகவலறிக்கை மற்றும் ஆய்வாளர் மற்றும் காவல் துணை கண்காணிப்பாளர் விசாரணையில் அவ்வாறு கைது பற்றிய விவரத்தை உறவினர்களுக்கு தகவல் தெரிவித்ததாக கூறவில்லை என்றால் சரிதான். இரயில்வே கேட்டை கடந்த பின்னர்தான் அந்த வீடு உள்ளது. சம்பவ இடத்தைச்

சுற்றி வீடுகள் உள்ளதா என்று ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு மேல்புறம் சற்று தொலைவில் அப்துல்கலாம் நகர் என்று உள்ளது. கீழ்புறம் மக்கா நகர் என்று உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடத்தைச் சுற்றிலும் குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றும் நான் கூறுவதுபோல் ஒரு சம்பவம் நடந்திருந்தால் அவர்களையும் அழைத்திருப்பேன் என்றும் அவர்களும் கூடியிருப்பார்கள் என்றும் நான் கூறுவது போன்ற சம்பவம் நடைபெறவேயில்லை என்பதால்தான் அதுபற்றி எனக்கு எதுவும் தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு மற்ற சாட்சிகளின் வாக்குமூலமும் ஒரே மாதிரியாக வார்த்தைகள் மாறாமல் தயாரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரிகள் எந்த சதியிலும் ஈடுபடவில்லை என்றும், எதிரிகளை சம்பவ இடத்தில் கைது செய்ததாக கூறுவதும் சொன்ன நேரத்தில் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ததாக கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. நான் கைது செய்ததாக கூறப்படும் நாளிலிருந்து இரண்டு நாட்களுக்கு முன்பே அவர்களை எங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து பின்னர் ஆவணங்களை தயாரித்து கைது பற்றி அறிவித்துள்ளோம் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகளுடன் காவல் நிலையம் வந்தபோது காவல் ஆய்வாளர் நிலையத்தில் இல்லை. நான் வழக்கு பதிவு செய்து தகவல் தெரிவித்த பின்னர் ஆய்வாளர் நிலையம் வந்து விசாரணை நகலை பெற்றுக் கொண்டார். சுமார் 1/2 மணி நேரம் கழித்து அவர் வந்திருக்கக்கூடும் தற்போது ஞாபகமில்லை.

**2,3,4,6 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணையை தமதாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.**

**மேலும், குறுக்கு விசாரணை**

இரகசிய தகவல் வாய்மொழியாக கிடைத்த தகவல் ஆகும். நாங்கள் ரோந்திலிருந்தபோது தகவலாளி என்னிடம் நேரில் கூறினார். இரயில்வே கேட் கடந்து ஆய்க்குடி செல்லும் சாலையில் அவ்வாறு தகவல் கிடைத்தது. நாங்கள் ரோந்து செல்லும்போது பாக்கெட் டைரியில் அதை குறித்துக் கொள்வோம் என்றால் சரிதான். அந்த பாக்கெட் டைரியை உயர் அதிகாரிகள் கேட்கும்போது ஒப்படைக்க வேண்டும். முதல் தகவலறிக்கை பதிவு செய்தபோது 5 நபர்கள்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வீடு கான்கீரிட் மேற்கூரை கொண்ட இடிந்த வீடாகும். அந்த வீடு சுற்றுச்சுவர் கொண்டது என்றும் அந்த சுற்றுச்சுவரில் ஒரே ஒரு நுழைவு வாயில் உள்ளது என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. நான் வழக்கு பதிவு செய்த அதே காலக்கட்டத்தில் தமிழ்நாட்டில் வேறு சில இடங்களிலும் இதே போன்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சாட்சிகள் கண்ணன் மற்றும் மணிகண்டன் ஆகி ய இருவரும் தென்காசி காவல் நிலைய எல்கைக்குட்பட்ட பகுதியில் வசிப்பவர்கள் என்றால் சரிதான். பொதுவாக காவல் துறையினர் தாக்கப்படும்போது தாக்கியதாக கூறப்படும் தரப்பினர் சார்ந்த மொழி, இனம், மதம் கொண்ட நபர்கள் மீது தொடர்ச்சியாக வழக்கு பதிவு செய்வது எங்கள் காவல் துறையின் வழக்கம் என்றால் சரியல்ல. முதல் தகவலறிக்கை தேசிய

ஒற்றுமைக்கும், இந்திய இறையாண்மைக்கும் குந்தகம் விளைவிக்கும் வகையில் செயல்பட வேண்டுமென்று பேசிக் கொண்டிருந்தார்கள் என நான் முதல் தகவலறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஒரு ஆட்டோவில் மூன்று நபர்கள் மட்டும் பயணிக்க அனுமதிக்கப்பட்டவர்கள் என்றால் சரிதான். களியாக்காவிளையில் ஏற்பட்ட அசாதராண நிலையை வைத்துக் கொண்டு எங்கள் உயர் அதிகாரிகள் தமிழகம் முழுவதும் வழக்குகள் பதிவு செய்ய உத்தரவிட்டதன்பேரில் புள்ளி விவரக் கணக்கிற்காக நாங்கள் பலரையும் பிடித்து வந்து பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 2 வது எதிரியை அந்த கட்டிடத்தில் பார்த்த அன்றுதான் முதலாவதாக எனக்கு தெரியும். 1, 2 எதிரிகளுக்கு முன் வழக்குகள் உள்ளது என்றால் சரிதான். முன் வழக்குகள் உள்ள எதிரிகளுக்கு சரித்திர பதிவேடு பராமரிக்கப்படும் என்றால் சரிதான். நன்னடத்தையை காப்பதற்காக கு.வி.மு.ச. பிரிவு 110 ன் கீழ் பிணை முறி எழுதி பெறப்படும் என்றால் சரிதான். சரித்திர பதிவேட்டில் குறிக்கப்பட்ட நபர்கள் தினமும் காலையிலும், மாலையிலும் கண்காணிக்கப்படுவார்கள் என்றால் சரியல்ல. ஒவ்வொரு சிறப்பு பிரிவு போலீசாரும் சரித்திர பதிவேடு குற்றவாளிகள் குறித்த தகவல்கள் எங்களிடம் பரிமாரிக்கொள்வார்கள் நாங்களும் பரிமாரிக்கொள்வோம். சரித்திர பதிவேடு குற்றவாளிகளுக்கு உரிய ஆவணங்கள் நிலையத்தில் இருக்கும். 2 ம் எதிரி மீது பல பொய் வழக்குகள் போட்டதால் 2 ம் எதிரி காவல் துறையினர் மீது பல உயர்

அதிகாரிகளிடம் புகார் கொடுத்து பொது வெளியிலும், செய்தித்தாளிலும் தொலைக்காட்சியிலும் பேட்டி அளித்து எங்கள் துறையின் அவலங்களை வெளிப்படுத்தியதால் அவர்மீது நாங்கள் விரோதம் கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளை நான் பார்த்த இடம் யாருக்கு சொந்தமானது என்று முதல் தகவலறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். களியாக்கவிளையில் நடந்த சம்பவத்திற்கு நாங்கள் ஒவ்வொரு ஊரிலும் குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை சட்ட விரோதமாக பிடித்து வந்து அதன்பின்னர் பல பொய் வழக்குகள் போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.07.11 16:54:39 +0530